*திருச்சி - 8.*
*27.2.1986*

அன்பிற்குரிய ஜாமிஆ அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவீ காரி உபைதுல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு அபூ அப்தில்லாஹ் (ஷாஹுல் ஹமீது) எழுதும் மடல்.

அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்)

நலம். நலம் விளைய அல்லாஹ்(ஜல்)வை இறைஞ்சுகிறேன். 20.2.1986 வியாழன் அன்று மத்ஹபுகளின் இன்றியமையாமை என்ற தலைப்பில் நீங்கள் துவரங்குறிச்சியில் பேசிய பேச்சின் ஒலிப்பதிவு கிடைத்துள்ளது.

தங்கள் பேச்சைக் கேட்டதில், இதுநாள் வரை தங்களைப் பற்றி நான் கொண்டிருந்த உயர்ந்த எண்ணம் மதிப்பில் குறைந்துவிடுமோ என அஞ்சுகிறேன்.

உண்மையை உணர்கிறீர்கள் உண்மையை உணர்த் தும் நிலையில் நீங்கள் இல்லை என்றுதான் இதுநாள் வரை கருதி வந்தேன்.

உண்மையை மறைக்கும் முயற்சியில் தாங்களும் பங்கு கொள்கிறீர்கள் என்ற ஐயப்பாட்டைத் துவரங்குறிச்சிப் பேச்சு எழுப்பியுள்ளது.

எங்கள் வெளியீடுகளையெல்லாம் நீங்கள் நடுநிலையோடு பார்த்ததாகத் தெரியவில்லை. அல்லது பார்த்துப் புரிந்துகொண்டு பாமர மக்களைக் குழப்ப, அவ்வாறு பேசி இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஐயம். ஆத்திரத்தோடு அணுகினால், நிரபராதியும் குற்றவாளி ஆகிவிடுவான். அனுதாபத்தோடு அணுகினால் குற்றவாளியும் நிரபராதி ஆகிவிடுவான். ஆத்திரமும் இல்லாமல், அனுதாபமும் இல்லாமல் நடுநிலையோடு அணுகினால் மட்டுமே உண்மையை உணரமுடியும். தாங்கள் எங்கள் வெளியீடுகளையெல்லாம் ஆத்திரத்தோடு அணுகி இருக்கிறீர்கள் என்பதையே தங்கள் பேச்சு காட்டுகிறது.

எங்களுடைய வெளியீடுகளில் எதிலாவது, ஒன்றிலாவது இத்திபா - இதாஅத் - இக்திதா போன்ற குர்ஆன் - அஹாதீதால் ஒப்புக்கொள்ளப்பட்ட, விளங்கிப் பின்பற்றலை மறுத்து எழுதி இருக்கிறோமா? ஆதாரம் காட்ட முடியுமா?

அரபி மொழியைக் கற்றுப் புலமை பெற்றுள்ள தங்களுக்கு, நான் தக்லீதுக்கும் இவற்றிற்குமுள்ள மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்ட வேண்டுமா? அப்படியானால் முன்ஜித் பக்கம் 649, நடுப்பத்தியில் 'தக்லீத்' பற்றியும் பக்கம் 59-ல் 'இத்திபா' பற்றியும், பக்கம் 475 நடுப் பத்தியில் 'இதாஅத்' பற்றியும் பக்கம் 614-ல் 'இக்திதா' பற்றியும் பார்வையைச் செலுத்துங்கள்.

குர்ஆனாலும், அஹாதீதாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இத்திபா - இதாஅத் - இக்திதா இவற்றோடு, குர்ஆனாலும், ஹதீஸாலும் தெளிவாக மறுக்கப்பட்டுள்ள தக்லீதை இணைத்துப் பேசி, எல்லாம் ஒன்றுதான் என்று பாமர மக்களைக் குழப்புகிறீர்களே, இது நியாயம் தானா? அரபி படித்த ஆலிமுக்கு இது இழுக்கல்லவா?

நாங்கள் இப்போது பொதுமக்களுக்கு நடுவில் எடுத்து வைக்கின்ற சர்ச்சைகள் என்ன? இதுவரை அதன் தொடர்பாகத் தாங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

குர்ஆனுக்கும் அஹாதீதுக்கும் ஒத்த கருத்துக் களை எந்த இமாம் சொல்லி இருந்தாலும், நாங்கள் அவற்றை மறுத்துப் பேசி இருக்கிறோமா? வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறோமா? இல்லை. குர்ஆனிலும், ஹதீஸி லும் காணமுடியாத விஷயத்தில், குர்ஆனுக்கும், ஹதீஸுக் கும் முரணில்லாமல் எந்த இமாமாவது அபிப்பிராயம் சொல்லி யிருந்தாலும், அதை மறுத்துப் பேசியதுண்டா? துண்டு வெளியீடுகள் வெளியிட்டதுண்டா?

தெளிவாகக் குர்ஆனிலும், ஹதீஸிலும் மோதுகின்ற முரண்படுகின்ற, இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை களைக் குழி தோண்டிப் புதைக்கின்ற இமாம்களின் பெயரால் இட்டுக் கட்டப்பட்டுள்ள கட்டுக் கதைகளைத் தான் மறுத்துப் பேசுகிறோம் பிரசுரங்கள் வெளியிட் டிருக்கிறோம் வெளியிட இருக்கிறோம்! இது தவறா?

நிதானமாக நடுநிலையோடு சிந்தித்துச் சொல்லுங்கள்.

அப்படியானால் தாங்கள் என்ன செய்ய வேண்டும்?

அரபி படித்த வல்லுநர், 'தக்லீத்' 'தஸவ்வுஃப்' இரண்டும் குர்ஆனிலும், ஹதீஸிலும் உள்ளவைதான் என்பதற்கு ஆதாரங்கள் கொடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இத்திபா, இதாஅத், இக்திதா போன்ற விளங் கிப் பின்பற்றுதலுக்குரிய குர்ஆன், ஹதீஸை அவற்றிற்கு முரண்பட்ட தக்லீதுக்கு ஆதாரமாக எடுத்துக் கொடுக்கி றீர்களே, இது தங்கள் மனசாட்சிப்படி செய்யும் செயலா? தயவு செய்து சொல்லுங்கள்.

**அதீவுல்லாஹ் வ அதீவுர் ரஸூல....** என்ற 4:59 ஆயத்தின் பாதியை ஓதிக்காட்டி அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும், இமாம்களுக்கும் வழிப்படுவதை அல்லாஹ்வே அங்கீகரித் திருக்கிறான். இவர்கள் இதைக் கிறிஸ்தவர் களின் திரியேகத்துவத்திற்கு ஒப்பிட்டு எழுதி இருக்கிறார் கள் என்று பேசி இருக்கிறீர்கள். எங்கள் வெளியீடுகளில் அவ்வாறு எழுதப்பட் டுள்ளதா? காட்ட முடியுமா? கிறிஸ்த வர்கள் சொல்லும் திரியேகத்துவத்திற்கும் நம்மவர்கள் சொல்லும் தக்லீத் தத்துவத்திற்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்று தான் என்ற கருத்தில்தான் எழுதி இருக்கிறோம். இங்கும் நாங்கள் இத்திபாவை மறுக்க வில்லை தக்லீதையே மறுக்கிறோம்.

காரணம் : கிறிஸ்தவ பாதிரிகள் மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கத் திரியேகத்துவத் தத்துவத்தை இட் டுக்கட்டியது போல, நம்மவர்களும் அதே நோக்கத்தோடு 'தக்லீத்' தத்துவத்தை இட்டுக் கட்டியுள்ளார்கள் என்பதையே தெளிவுபடுத்தி இருக்கிறோம். தவறு என்றால் ஆதாரத்தோடு விளக்குங்கள்.

அதுசரி! அந்த ஆயத்தின் பாதியை ஓதிக் காண்பித்துப் பாமர மக்களைக் குழப்பத்தில் ஆக்கினீர் களே? அந்த ஆயத்தின் மறுபாதி என்ன சொல்லுகிறது என்பதை விளக்கினீர்களா?

**"உங்களுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால், அதனை அல்லாஹ்விடமும், தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ் வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், இதுதான் நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்". (4:59)** என்ற இமாம்களின், அமீர்களின் ஹக்கீம்களின் அதிகார வரம்பைத் தெளிவு படுத்தும் அந்த ஆயத்தின் இந்த முக்கிய பாதியை உங் களைப் போன்றவர்கள் மறைப்பதன் ரகசியம் என்ன? உங்களைப்பற்றி எங்களால் என்ன முடிவுக்கு வரமுடியும்?

**"அவர்களுக்குத் தௌபாச் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்குமா? என்று சந்தேகப்படுகிறேன்"** என்று பேசி இருக்கிறீர்கள், யார் இது விஷயத்தில் தௌபாச் செய்யும் கட்டத்தில் இருக்கிறார்கள்? தயவு செய்து சிந்தியுங்கள்.

நாங்களாவது எங்களது உள் உள்ளம் எதை உண்மை என்று நம்புகிறதோ, அதையே உண்மை என்று சொல்லுகிறோம். அது உண்மை அன்று என்று குர்ஆன், ஹதீஸ் கொண்டு எப்போது மெய்ப்பிக்கப்பட்டாலும், அடுத்த வினாடியே தௌபாச் செய்யத் தயாராக இருக்கி றோம். ஆக நாங்கள் அறிந்தவரை குர்ஆன், ஹதீஸுக்கு மாறாக எங்கள் மனசாட்சிக்கு மாறாகத் நாங்கள் செயல் படவில்லை. ஆனால் தெளிவான குர்ஆன், ஹதீஸுக்கு முரணான செய்திகளைக் குருட்டுத்தனமாகப் பாமரமக்கள் நம்பவேண்டும் என்ற நோக்கோடு குர்ஆன் வசனங்களை மறைத்தும் திரித்தும் சொல்பவர்கள்தான், பாதி சொல்லியும், பாதி சொல்லாமலும் மறைப்பவர்கள்தான் தங்கள் உள்மனம் உண்மையானது என்று ஒப்புக் கொண்டாலும், தங்களின் போலி மதிப்புக்காக அற்ப உலக வாழ்வின் வளத்திற்கும் வசதிக்கும் ஆசைப்பட்டு, அந்த உண்மையை மறைக்க முயல் பவர்கள்தான் தௌபாச் செய்யும் சூழலை இழக்க நேரலாம் என்பதை வருத்தத்துடன், அதே சமயம் அவசியம் கருதிச் சமர்ப்பிக்கிறேன்.

தங்களை நானும், என்னை நீங்களும் நீண்ட காலமாகவே அறிவோம். மார்க்க விஷயத்தில் நமது அறிமுகமோ, நட்போ குறுக்கிடமுடியாது. அந்த நட்பின்

காரணமாகத்தான் இந்தத் தனிக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதியுள்ளேன்.

இதற்குத் தெளிவான ஆதாரப்பூர்வமான பதிலை எதிர்பார்க்கிறேன். உண்மையில் நான் தவறியிருந்தால் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டால் என்னைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் பொதுமக்களுக்கு நடுவே தாங்கள் பேசிய இந்தப் பேச்சுக்கு விளக்கம் கிடைக்காவிட்டால், உங்களின் இந்தப் பேச்சை முழுமையாக விமர்சித்துப் வெளிப்படையாகத் திறந்த மடல் என்ற பெயரில் பொதுமக்களிடையே வெளியிட வேண்டி வரும் என்பதையும், தாழ்மையுடன் அறியத்தருகிறேன்.

தங்களின் ஆதாரப்பூர்வமான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ்(ஜல்) நமது வரட்டு மதிப்புக்களையும், உலக ஆசாபாசங்களையும் விட்டு, உண்மை வருகிறோம் என்ற அப்பட்டமான உண்மையைச் சாதாரண நடுத்தரமான அறிவு படைத்த நடுநிலையாளர்கள் கூடத் தெளிவாக விளங்கிக்கொள்ளும்போது, பேரறிஞர் என மக்களால் சொல்லப்படும், உங்களால் அந்த மறுக்க முடியாத உண்மைகளை விளங்க முடியாமல் இருப்பது எனக்கு மிக்க வியப்பை உண்டு பண்ணியிருக்கிறது. அல்லாஹ் ரப்புல் ஆலமீன் யார் வழிகேட்டில் இருக்கிறார்களோ அவர்களுக்கு நேர்வழியைத் தன் அருள் கொண்டு அளித்தருள்வானாக. ஆமீன்.

*இங்ஙனம்,*

அபூ அப்தில்லாஹ்